

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் துறைமுகம் மேற்கு பகுதியில் முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழா அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா. ஜெகதீஷ் தலைமையில் அமைச்சர் எ.வ. வேலு, கழக இளம் பேச்சாளர் ரூ.கீர்த்தனா ஆகியோர் உரையாற்றிட வருகைதந்த 1000 த்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதில் மேயர் பிரியா ராஜன், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.முரளி., எஸ்.ராஜசேகர், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பரிதி இளம் சுருதி எம்.சி,, வானவில் விஜய், இரா.நரேந்திரன்,பி.எம்.யாழினி,எம். விஜயகுமார்,கே.எஸ்.எம்.நாதன்,ப. ஸ்ரீராமுலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர் – ஓதுவார் – தவில்

# நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற 108 மாணவ - மாணவியருக்கு சான்றிதழ்கள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, அக்.4-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (03.10.2025) இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சி பள்ளிகளில் 2024 25 ஆம் கல்வியாண்டில் ஓராண்டு அர்ச்சகர் பயிற்சி முடித்த 2 பெண்கள் உள்பட 89 மாணவர்கள், ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் மூன்றாண்டு ஓதுவார் பயிற்சி முடித்த 12 மாணவர்கள், தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சி பள்ளியில் மூன்றாண்டு பயிற்சி முடித்த 7 மாணவர்கள் என ஆக மொத்தம் 108 மாணவர்களுக்கு அதற்கான சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, அர்ச்சகர் பயிற்சி பள்ளி, ஓதுவார் பயிற்சி பள்ளி, தவில் மற்றும் நாதஸ்வரம் பயிற்சி பள்ளி, வேத ஆகம பாடசாலைகள், 4000 திவ்ய பிரபந்தம் பயிற்சி பள்ளிகள் என 21 பயிற்சி பள்ளிகள் மேம்படுத்தப்பட்டு, இந்த பயிற்சி பகுதிகளுக்கு உண்டான தகுதியுள்ள ஆசிரியர்கள் நியமிக்கபட்டு, தொடர்ந்து இந்த பயிற்சி பள்ளிகள் சிறப்போடு திராவிடமான வளர்ச்சியுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த பயிற்சி பணியுடைய ஆரம்பகால ஊக்கத் தொகை ரூ.500 என்று 2007 ஆம் ஆண்டில் இருந்ததை, 2021 ஆம் ஆண்டு வரை வெறும் ரூ.1000 என்ற அளவில்தான் வழங்கியிருந்தது. தமிழக முதல்வர் பொறுப்பேற்றவுடன், 2021-22 ஆம் ஆண்டில், முழு நேர பயிற்சி பள்ளியில் பயில்கின்ற மாணவச் செல்வங்களுக்கு ரூ.3000 மற்றும் பகுதிநேர பயிற்சி பள்ளியில் பயில்கின்ற மாணவச் செல்வங்களுக்கு ரூ.1500 ஊக்கத் தொகையாக அறிவித்தார்.

அடுத்த ஆண்டான 2023 இல், அந்த ரூ.3000 ஊக்கத் தொகையை ரூ.4000 ஆகவும், ரூ.1500ஐ ரூ.2000 ஆகவும் உயர்த்தி அறிவித்தார். அதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு, இந்த பயிற்சி பள்ளியில் பயில்கின்ற மாணவர்களுக்கு உணவு, சீருடை, தங்குமிட வசதியோடு, முழுநேர பயிற்சி பள்ளி மாணவர்களுக்கு ரூ.10,000 பகுதிநேர மாணவர்களுக்கு ரூ.5,000 அன்று வழங்கி உள்ளார். இந்த பயிற்சி பணியில் பயில்கின்ற மாணவச் செல்வங்களுக்கு இன்றுவரை வழங்கப்பட்ட சான்றிதழ்கள் எண்ணிக்கை - 2021 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 213 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதோடு மட்டுமல்லாது, ஓதுவார்கள் நியமனம் - இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை 43 ஓதுவார்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் பெண் ஓதுவார்கள் மட்டும் 12 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த பயிற்சி பள்ளிகளை மேலும் விரிவுபடுத்தவும், மாணவச் செல்வங்களுக்கு பணியிடங்களை ஏற்படுத்தவும், பல்வேறு நீதிமன்றப் போராட்டங்களுக்கு பிறகு ஆகம திருக்கோயில்களை நிர்ணயிக்க உடைய குழுக்களின் இறுதி வடிவம் உச்சநீதிமன்ற தீர்ப்பால் கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில், ஆகமக் குழுவான ஐவர் குழுவின் கூட்டம், இந்து சமய அறநிலைத் துறை ஆணையர் அலுவலகத்தில் விரைவில் நடைபெற இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இதுவரை 3,707 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை ஜனவரி மாதத்திற்குள் 4,000 என்பதைத் தொடும் என்று நம்பிக்கை உள்ளது. நில மீட்பு குறித்து எடுத்துக்கொண்டால், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ரூ.8,015.80 கோடி மதிப்பிலான நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனுடன், இந்து சமய அறநிலைத் துறை நிலங்களை அடையாளப்படுத்தும் பணிக்காக "HRCE" என்ற எல்லைக் கற்கள் பதிக்கப்படும் பணிகள் துவக்கப்பட்டு, இதுவரை 1,41,820 எல்லைக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

இந்த எல்லைக் கற்கள் பதிக்கப்பட்ட இடங்களின் பரப்பளவு - 2,15,385 ஏக்கர் நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்தந்த இடங்களில், எந்த திருக்கோயிலுக்குச் சொந்தமானது, பரப்பளவு, கோயிலின் பெயர் ஆகியவை அடங்கிய பதாகைகள் நட்டு, பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த துறையில், ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களுக்காக, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ரூ.425 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதனுடன் உபயநிதி ரூ.140 கோடி அளவிற்கு பெற்றுள்ளோம். இதன் மூலம், 507 கோயில்கள் ஆயிரம் ஆண்டுகள் திருக்கோயில்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் 67 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்துள்ளது. இந்த செயல்பாடுகள் மூலமாக, தமிழகத்தில் திருக்கோயில்கள் பாதுகாக்கப்பட்டு, தமிழர் கலாச்சாரம், தமிழர் கலை மற்றும் வழிபாட்டு மரபுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வருகின்ற பிப்ரவரி மாதத்திற்குள், ஆயிரம் ஆண்டுகள் பழமையான 100 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெறும். இந்த செயல்பாடுகளை புத்தக வடிவில் வெளியிட அரசு திட்டமிட்டுள்ளது. உபயதாரர்கள் நிதி இதுவரை ரூ.1,200 கோடி அளவிற்கு திருக்கோயில்களுக்கு உபயதாரர்கள் நிதி பெற்றிருக்கின்றனர். இந்த ஆட்சி தான், உபயதாரர்கள் நிதியை முழுமையாக, அவர்கள் விருப்பப்படி, திருக்கோயில் வளர்ச்சிக்கு பயன்படுத்தும் ஆட்சி என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். பக்தர்களுக்கான வசதிகள் மருத்துவ சேவை, உணவுக்கூடங்கள், தங்குமிடம், விருந்து மண்டபங்கள், முடி காணிக்கை மண்டபங்கள், போக்குவரத்து வசதி, தெப்பத் திருவிழாக்கள் போன்றவை ஒருங்கிணைக்கப்பட்டு, வரலாறு காணாத அளவிற்கு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த திட்டங்களில் அமைச்சர் துறை செயலாளர் அன்பிற்கினிய மணிவாசகம், ஆணையாளர் ஸ்ரீதர், கூடுதல் ஆணையாளர்கள் பழனி, கவிதா, ஜெயராமன், லட்சுமணன், ஹரிப்பிரியா, வான்மதி ஆகியோர் சிறப்பாக ஒத்துழைத்து வருகிறார்கள்.

அதேபோல், மாங்காடு, கபாலீஸ்வரர், பார்த்தசாரதி திருக்கோயில்களின் பட்டாச்சாரியார் மற்றும் குருக்கள் ஆகியோருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதே கோயிலில், பின் காம்பவுண்ட் சுவர் சேதமடைந்துள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக, பணிகளைச் சுட்டிக்காட்டியதற்கு நன்றி. ஸ்ரீரங்கநாதருக்கு முன்பு தோன்றிய இந்த கோவில் என்று அடையாளம் காணப்பட்டு வருகிறது.

ஆதிதிருவரங்கம் திருக்கோயில் நெற்களஞ்சியம் என்பது மிகவும் பழமையானது. பல திருக்கோயில்களில் நெற்களஞ்சியம் இருந்தாலும், இந்த திருக்கோயிலில் உள்ள நெற்களஞ்சியம் மிகவும் பிரசித்திபெற்றதும், புதுமையானதும் ஆகும். தமிழகத்தில் எந்த திருக்கோயிலும் இல்லாத அளவிற்கு, இதைப் பொக்கிஷமாக கருதி, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அதைப் பாதுகாத்து வருகிறோம். அந்த திருக்கோயிலின் குடமுழுக்கு ஜனவரி மாதம் நிச்சயமாக நடைபெறும்.

கடந்த நான்கு ஆண்டுகளில், அறநிலையத்துறை சார்பில் உள்ள கோவில்களில் காணாமல் போன சிலைகள் எத்தனை மீட்கப்பட்டுள்ளன, எத்தனை அடையாளம் காணப்பட்டுள்ளன என்பதற்கான கேள்விக்குப் பதிலாக இந்த ஆட்சி தொடர்பாக, சிலைகள் மீட்பு ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தாலும், பாதுகாப்பு சூழ்நிலை என்பது மறுபுறமாக இருந்து பணியாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில், திருக்கோயில்களிலுள்ள சிலைகளை பாதுகாப்பதற்காக, ஸ்ட்ராங் ரூம்கள் எனப்படும் பாதுகாப்பு அறைகள், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 1,800 வரை உருவாக்கப்பட்டுள்ளன. மேலைநாடுகளுக்கு திருடி அனுப்பப்பட்ட சிலைகள் மரத்தால் ஆன, ஐம்பொன்களால் ஆன, உலோகச் சிலைகள் போன்றவற்றில், இதுவரை 48 சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. மேலும், 28க்கும் மேற்பட்ட சிலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்த நாடுகளின் எம்பஸி மூலமாக, காவல்துறை மற்றும் உள்துறை ஒருங்கிணைந்து மீட்டெடுக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, கடந்த காலத்தில் நடந்த சிலை திருட்டுக்களில் 10% கூட இந்நிலையில் நடைபெறவில்லை என்பது பெருமையுடன் கூறத்தக்கது. அதே போல், சில இடங்களில் சிறிய திருட்டுகள் நடந்திருந்தாலும், உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு, திருமேனிகள் மீட்கப்பட்டுள்ளன. இது தான் இந்த ஆட்சியின் தனித்துவமான வரலாறு. புள்ளிவிவரங்களுடன், இதுவரை எத்தனை சிலைகள் மீட்கப்பட்டுள்ளன, எத்தனை சிலைகள் மீட்கப்பட வேண்டியுள்ளன என்பது குறித்த முழுமையான அறிக்கையை நாளை துறை சார்பில் அறிவிக்க உள்ளோம்.

மருதமலை முருகன் கோயில் குறித்து சுணக்கமில்லை. அனைத்து பணிகளும் நடைபெற்று வருகின்றன. நல்ல எண்ணங்களுடன் செயல்படும் இத்தகைய நற்செயல்களுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவது வழக்கமாக உள்ளது. அந்த வகையில், சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளனர். வருகின்ற 10ஆம் தேதி அந்த வழக்கு நடைபெற உள்ளது. வனத்துறையும், இந்து சமய அறநிலைத்துறையும் ஒருங்கிணைந்து ஆய்வு செய்து, உள்ள சாத்தியக்கூறுகளை நீதிமன்றத்தில் விளக்க இருக்கின்றனர். நீதிமன்றம் அனுமதி தரும் என்று நம்புகிறோம்.

அந்த சிலை, அதனுடன் தொடர்புடைய பெருந்திட்டங்கள் பாதைகள், நவீனமயமாக்கப்பட்ட பேருந்து நிலையங்கள், கழிப்பிடம், குளியல் வசதி, தங்கும் வசதி ஆகியவை அனைத்தும் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. சிலை அமைக்கும் பணிகள் நீதிமன்ற வழிகாட்டுதலோடு நடைபெறுகின்றன. இப்போது வரை நீதிமன்றம் எந்த தடையும் விதிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கரூர் பிரச்சாரத்தின் போது பாதுகாப்பு குறைவாக இருந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு. இதுகுறித்து 27ஆம் தேதி இரவு முதல், பல விமர்சனங்களும், விளக்கங்களும் முதலமைச்சர் அவர்களின் சார்பிலும் அரசின் சார்பிலும் வழங்கப்பட்டுள்ளன. உண்மை நிலவரங்கள் தெளிவாக கூறப்பட்டுள்ளன. இது போன்ற உயிரிழப்புகள் மீண்டும் நடைபெறாமல் இருக்க, முதலமைச்சர் முழு கவனத்துடன், ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்துக் கொண்டு, எந்தவொரு பாதிப்பும் யாருக்கும் ஏற்படாமல் இருக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். முதலமைச்சரின் இப்பணிகள் மனிதாபிமானம் நிறைந்தவை என அனைத்து தரப்பினாலும் பாராட்டப்பட்டு வருகின்றன என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, பொ.ஜெயராமன், திருமதி சி.கல்யாணி, சிறப்புப் பணி அலுவலர் சி.லட்சுமணன், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, எழும்பூர் ஹஜ்ரத் மோதி பாபா தர்கா, சந்தனக்கூடு திருவிழாவை முன்னிட்டு கொடி ஏற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்றார். உடன் நிர்வாகிகள் உள்ளனர்

## திராவிடர் கழகத்தின் சார்பில் மறைமலைநகரில் இன்று மாலை நடைபெறுகிறது!

# சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாடு!

# முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார்!

## கி.வீரமணி தலைமை: அமைச்சர் தா.மோ. அன்பரசன் வாழ்த்துரை!

சென்னை,அக்.4-

திராவிடர் கழகத்தின் சார்பில் மறைமலைநகரில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் இன்று மாலை 6.00 மணியளவில் நடைபெறும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார். அமைச்சர் தா.மோ. அன்பரசன் வாழ்த்துரை வழங்குகிறார்.

இன்று காலை மாநாட்டை தி.மு.க. துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா துவக்கி வைக்கிறார். கூட்டணிக்கட்சி தலைவர்கள் தொல்.திருமாவளவன், மு.வீரபாண்டியன், ஜவாகிருல்லா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். பிற்பகலில் நடைபெறும் கருத்தரங்கில் தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி நிறைவுரை ஆற்றுகிறார்.

திராவிடர் கழகத்தின் சார்பில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாடு காலை நிகழ்ச்சிகள் செங்கை மறைமலை நகரில் உள்ள ஆழ்வார் திருமண மண்டபத்தில், நடைபெறுகிறது. திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை வகிக்கிறார்.

மாநாட்டை தி.மு.க. துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா துவக்கி வைத்து பேசுகிறார். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாகிருல்லா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

பகல் 12.00 மணியளவில் இம்மாநாட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

முன்னதாக காலையில் நிகழ்ச்சி தொடக்கமாக பெரியார் சமூகக் காப்பு அணியின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி திராவிடர் கொடியை ஏற்றி வைக்கிறார்.

சுயமரியாதை இயக்கத்தின் சமூகப் புரட்சி என்ற வரலாற்றுக் கண்காட்சியை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைக்கிறார்.

பிற்பகல் 2.00 மணியளவில் திராவிடர் கழக பிரச்சார செயலாளர் அருள்மொழி ஆர்.எஸ்.எஸ். தொற்றுநோயும், சுயமரியாதை இயக்க மாமருந்தும் என்ற தலைமையில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. இக்கருத்தரங்கில் தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு நிறைவுரை ஆற்றுகிறார்.

சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாடு மாலை நிகழ்ச்சிகள் மறைமலைநகர், பெரியார் திடலில் இன்று மாலை 6.00 மணியளவில் நடைபெற உள்ளது.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி மாநாட்டிற்கு தலைமை வகிக்கிறார். திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் வரவேற்புரை ஆற்றுகிறார். திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அறிமுக உரையாற்றுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வாழ்த்துரை வழங்குகிறார்.

இறுதியாக, தி.மு.கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்று, சுயமரியாதை இயக்க நூற்றாண்டு கல்வெட்டைத் திறந்து வைத்து மாநாட்டு நிறைவுரை ஆற்றுகிறார்.

முடிவில், செங்கல்பட்டு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் அ.செம்பியன் நன்றியுரை ஆற்றுகிறார்.

## வலைதளங்களில் வலம் வரும் செய்தி!




## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் – காஞ்சிபுரம் மாநகர கழகத்திற்கு உட்பட்ட

# வாக்கு சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் குழு BLA2 மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

## மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் மாநகரத்திற்கு உட்பட்ட 4 பகுதி கழகம், 51 வட்டங்களில் வாக்கு சாவடி ஒருங்கிணைப்பாளர் குழு ஆலோசனை கூட்டம் கீழ்கண்ட பட்டியல்படி எனது தலைமையில், நாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் ஆகியோர்கள் முன்னிலையில், மேயர், பகுதி செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், BLA2 ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

| தேதி | நேரம் | ஒருங்கிணைப்பாளர் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| பகுதி 1 | | | |
| 06-10-2025 | காலை 10.00 மணி | கே.திலகர், பகுதி செயலாளர் | குஜராத்தி சத்திரம் |
| | பகல் 11.00 மணி | வி.எஸ்.ராமகிருஷ்ணன் மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் | ராதா பார்ட்டி ஹால் |
| | பகல் 12.00 மணி | அ. யுவராஜ் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் | அக்கிரியா பார்ட்டி ஹால் கிருஷ்ணன் தெரு |
| பகுதி 4 | | | |
| 06-10-2025 | மாலை 4.00 மணி | எம்.தேவராஜ் மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் | சக்திவேல் திருமண மண்டபம் பிள்ளையார் பாளையம். |
| | மாலை 5.00 மணி | டி.வெங்கட்ராமன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் | சக்திவேல் திருமண மண்டபம் பிள்ளையார் பாளையம். |
| | மாலை 6.00 மணி | சு.வெங்கடேசன் பகுதி செயலாளர் | நாகேஷ் மஹால் |
| | மாலை 7.00 மணி | த.விஸ்வநாதன் மாவட்ட பிரதிநிதி | அண்ணாமலையார் பார்ட்டி ஹால், காந்தி நகர். |
| பகுதி 2 | | | |
| 07-10-2025 | காலை 10.00 மணி | கே.ஏ.செங்குட்டுவன் மாநகர அவை தலைவர் | கலைஞர் பவளவிழா மாளிகை |
| | பகல் 11.00 மணி | எஸ்.சந்துரு பகுதி செயலாளர் | ரெட்டியார் சத்திரம், வடக்கு மாட வீதி |
| பகுதி 3 | | | |
| 07-10-2025 | மாலை 4.00 மணி | எஸ்.கே.பி.சீனிவாசன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் | PMS சாலம்மாள் திருமண மண்டபம், |
| | மாலை 5.00 மணி | கே.சுப்பராயன் மாநகர பொருளாளர் | திருவேங்கிட மஹால் |
| | மாலை 6.00 மணி | வ.மலர்மன்னன் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் | சாய் மனோன்மணி திருமண மண்டபம் |
| | மாலை 7.00 மணி | அ.தசரதன் பகுதி செயலாளர் | தனலட்சுமி ஜெயா திருமண மஹால், ஒரிக்கை. |

மேற்கண்டவாறு நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்திற்கு மாவட்ட பிரதிநிதிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துக்கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

**சி.கே.வி.தமிழ்ச்செல்வன்**
**காஞ்சிபுரம் மாநகர செயலாளர்**